**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், வேலூர்.**

**முன்னிலை:- வெ.ரவிச்சந்திரன், பி.எஸ்.சி, பி.எல்.,**
**தலைமை ஏற்பு அதிகாரி.**

**2024ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை**

**கணக்கீட்டு மனு எண் 20/2020**
**(சி.என்.ஆர்.எண்.TNVL02-000032-2020)**

S.சியாமளா, வயது 49,
க/பெ.ஆர்.சிவலிங்கம்,
எண்.33, பெரியார் இரண்டாம் தெரு,
சாணாங்குப்பம்-635 814. . . . மனுதாரர்

எதிராக

டி.அப்துல் வாஹித் கம்பெனி,
புட்வேர் டிவிஷன்,
எண்.66/1, எம்.சி.ரோடு,
சின்னகொம்மேஸ்வரம்,
கங்காபுரம் அஞ்சல், வழி: ஆம்பூர்-635 802. . . . எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 08.03.2024 அன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்ததில், மனுதாரர் தரப்பில் தொழிற்சங்க செயலாளர் திரு.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் என் ஆய்வில் இருந்த இம்மனுவில் இன்று வழங்கும்:-

<u>**உ த் த ர வு**</u>

இம்மனுவானது மனுதாரருக்கு சேர வேண்டிய நீக்கப்பட்ட இழப்பீடு தொகை ரூ.1.83,750/- மற்றும் ஒரு மாத நோட்டீஸ் சம்பளம் ரூ.14,700/-, 2019 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத சம்பள நிலுவை தொகை ரூ.17,300/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை போனஸ் தொகை ரூ.61,740/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை ஈட்டிய விடுப்பு தொகை ரூ.15,190/=, ஆக மொத்தம் ரூ.2,92,680/-ம், இத்தொகையை வழங்கும் வரை 9% கூட்டு வட்டி வழங்கிட எதிர்மனுதாரர் நிறுவனத்துக்கு உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தாக்கல் செய்த மனு உரை சுருக்கம்</u>:-**

மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஸ்கில்டு தொழிலாளியாக 03.06.1994 முதல் 30.09.2019 வரை 25 ஆண்டுகள் வேலை செய்து வந்துள்ளார். நிர்வாக தொழிற்சாலையின் பேரில் ஊதியம் நிர்ணயிப்பதில் அரசாணைகள் உள்ள நிலையில் ஊதியம் நிர்ணயிப்பதிலும், போனஸ் நிர்ணயிப்பதிலும் தொழிலாளர் துறை மூலம் 12(3) ஒப்பந்தங்களும் ஏற்பட்டுள்ளது. நிர்வாக தொழிற்சங்கம் மூலம் ஒப்பந்தம் செய்யாமல் தொழிலாளர்கள் பிரதிநிதிகளைக் கொண்டு ஒப்பந்தம் மேற்கொள்வது உண்டு. மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை செய்து வந்த நிலையில் தொழிற்சாலையில் ஆர்டர்கள் குறைந்து விட்டது என்று நிர்வாகம் கூறி தொடர்ந்து வேலை தராமலும் சம்பளமும் வழங்காமலும் இருந்து மனுதாரரை நிர்பந்தப்படுத்தி ராஜினாமாவை பெற்றுக் கொண்டு மனுதாரருக்கு எவ்விதமான முன்னறிவிப்போ தகவலோயின்றி திடீரென்று 30.09.2019 முதல் வேலைநீக்கம் செய்து வேலைக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையை நிர்வாகம் உருவாக்கிவிட்டுள்ளதால் மனுதாரர் நீக்கப்பட்டதை அடிப்படையாக கருதி மனுதாரருக்கு சேர வேண்டிய நீக்கப்பட்ட

இழப்பீடு தொகை ரூ.1.83,750/- மற்றும் ஒரு மாத நோட்டீஸ் சம்பளம் ரூ.14,700/-, 2019 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத சம்பள நிலுவை தொகை ரூ.17,300/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை போனஸ் தொகை ரூ.61,740/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை ஈட்டிய விடுப்பு தொகை ரூ.15,190/=, ஆக மொத்தம் ரூ.2,92,680/-ம், இத்தொகையை வழங்கும் வரை 9% கூட்டு வட்டியுடன் வழங்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.த.சா.1 ஆக விசாரிக்கபட்டு அவர் மூலமாக ம.த.சா.ஆ.1 மற்றும் ம.த.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளது.

4. இந்த மனுவில் தீர்வு காண வேண்டிய சங்கதி யாதெனில், மனுதாரர் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு நீக்கப்பட்ட இழப்பீடு தொகை ரூ.1.83,750/- மற்றும் ஒரு மாத நோட்டீஸ் சம்பளம் ரூ.14,700/-, 2019 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத சம்பள நிலுவை தொகை ரூ.17,300/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை போனஸ் தொகை ரூ.61,740/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை ஈட்டிய விடுப்பு தொகை ரூ.15,190/=, ஆக மொத்தம் ரூ.2,92,680/-ஐ வழங்கும் வரை 9% கூட்டு வட்டியுடன் வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டுமா என்பதேயாகும்.

5. <u>தீர்வு</u> :-

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 25 ஆண்டுகள் வேலை செய்து வந்த நிலையில், தொழிற்சாலையில் ஆர்டர்கள் குறைந்து விட்டது என்று நிர்வாகம் கூறி தொடர்ந்து வேலை தராமலும் சம்பளமும் வழங்காமலும் இருந்து மனுதாரரை நிர்பந்தப்படுத்தி ராஜினாமாவை பெற்றுக் கொண்டு மனுதாரருக்கு எவ்விதமான

முன்னறிவிப்போ தகவலோயின்றி திடீரென்று 30.09.2019 முதல் வேலைநீக்கம் செய்து வேலைக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையை நிர்வாகம் உருவாக்கிவிட்டுள்ளதால் மனுதாரர் நீக்கப்பட்டதை அடிப்படையாக கருதி நீக்கப்பட்ட இழப்பீடு தொகை ரூ.1.83,750/- மற்றும் ஒரு மாத நோட்டீஸ் சம்பளம் ரூ.14,700/-, 2019 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத சம்பள நிலுவை தொகை ரூ.17,300/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை போனஸ் தொகை ரூ.61,740/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை ஈட்டிய விடுப்பு தொகை ரூ.15,190/=, ஆக மொத்தம் ரூ.2,92,680/-ஐ 9% கூட்டு வட்டியுடன் வழங்க எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு வாதுரைக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக ஆவணங்கள் ம.த.சா.ஆ.1 மற்றும் ம.த.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சேர வேண்டிய இறுதி தொகை குறித்து எதிர்மனுதாரர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 30.09.2019 தேதியிட்ட அட்டவணை நகல் ம.த.சா.ஆ.1 ஆகவும், மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய 30.09.2019 தேதியிட்ட கடித நகல் ம.த.சா.ஆ.2 ஆகவும் குறியிடப்பட்டுள்ளது. மனுதாரரது கோரிக்கைக்கு மாறாக எதிர்மனுதாரர் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யவில்லை. மேலும் இதற்கு முன்னர் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருமுறை ஒருதலைபட்சமாக உத்தரவான நிலையில் அந்த உத்தரவினை ரத்து செய்ய வேண்டி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம. எண் 1/2023 என்ற மனுவானது கடந்த 08.12.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்து வழக்கில் முன்னிலையாகி இந்த மனுவை நடத்தாத நிலையில், மனுதாரர் சாட்சியம் மூலமாக எதிர்மனுதாரர் நிறுவனத்திலிருந்து மனுதாரருக்கு சேர வேண்டிய நீக்கப்பட்ட இழப்பீடு தொகை ரூ.1.83,750/- மற்றும் ஒரு மாத நோட்டீஸ் சம்பளம் ரூ.14,700/-, 2019 ஆகஸ்ட்

மற்றும் செப்டம்பர் மாத சம்பள நிலுவை தொகை ரூ.17,300/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை போனஸ் தொகை ரூ.61,740/=, 01.01.2018 முதல் 30.09.2019 வரை ஈட்டிய விடுப்பு தொகை ரூ.15,190/=, ஆக மொத்தம் ரூ.2,92,680/- கிடைக்கத்தக்கது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருதி மனுதாரர் கோரியுள்ளவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**இறுதியாக, இந்த மனுவை அனுமதித்து மனுதாரர் கோரியுள்ளவாறு எதிர்மனுதாரர் மனுதாரருக்கு சேர வேண்டிய நீக்கப்பட்ட இழப்பீடு தொகை ரூ.1.83,750/- மற்றும் ஒரு மாத நோட்டீஸ் சம்பளம் ரூ.14,700/-, 2019 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத சம்பள நிலுவை தொகை ரூ.17,300/–, 01.01.2018 முதல் 30.09.2019 வரை போனஸ் தொகை ரூ.61,740/–, 01.01.2018 முதல் 30.09.2019 வரை ஈட்டிய விடுப்பு தொகை ரூ.15,190/–, ஆக மொத்தம் ரூ.2,92,680/-ஐ மூன்று மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், செலுத்த தவறினால் மேற்படி தொகைக்கு ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை பற்றிய உத்தரவு இல்லை.**

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V RAVICHANDRAN

Digitally signed by V RAVICHANDRAN

**தலைமை ஏற்பு அதிகாரி,**
**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம்,**
**வேலூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சி:-**

ம.த.சா.1 - திருமதி.S.சியாமளா

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-**

ம.த.சா.ஆ.1 - 30.09.2019 - நிர்வாகம் வழங்கிய இறுதி தொகை பற்றிய அட்டவணை நகல்

ம.த.சா.ஆ.2 - 30.09.2019 - நிர்வாகம் வழங்கிய கடித நகல்

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-**

- இல்லை -

V RAVICHANDRAN

Digitally signed by V RAVICHANDRAN

**தலைமை ஏற்பு அதிகாரி,**
**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம்,**
**வேலூர்.**